# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,878/2 — 1969 නොවැම්බර් 2 වැනි ඉරිදා — 1969.11.2

14,878/2 ம் இலக்கம்—1969 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 2 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

எல். டீ.–பீ. 22–69

### 1968 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க நிந்தகமக் காணிச் சட்டம்

1968 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க நிந்தகமக் காணிச் சட்டத்தின் 6 ஆம், 7 ஆம், 20 ஆம், 26 ஆம் பிரிவுகளினால் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் வண்ணம், காணி, நீர்ப்பாசன, மின்வலு அமைச்சரினால் செய்யப்பட்ட ஒழுங்குவிதிகள்.

சீ. பீ. த சில்வா,
காணி, நீர்ப்பாசன, மின்வலு அமைச்சர்.

கொழும்பு, நவெம்பர் 2, 1969.

1. இவ்வொழுங்குவிதிகள் 1969 ஆம் ஆண்டின் நிந்தகமக் காணிகள் (இல. 1) ஒழுங்குவிதிகளென எடுத்துக் காட்டப்படலாம்.

2. (1) எழுத்து மூலமான உரிமைக் கோரிக்கை எதுவும் சட்டத்தின் 6 (1) ஆம் பிரிவின் கீழ் முற்கொணரப்படுவதற்காக விதிக்கப்பட்டகாலம் போயா நாட்களையும் பொது விடுமுறை நாட்களையும் தவிர்த்து, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட தொண்ணூறு நாட்களைக் கொண்ட காலமொன்றுதல் வேண்டும்.

(2) உரிமைக் கோரிக்கை, அது சம்பந்தமாகச் செய்யப்படும் நிந்தகமக் காணி அமைந்துள்ள நிருவாக மாவட்டம் எதுவோ அதன் தகுதி வாய்ந்த அதிகாரியின் மூலம் எழுத்து மூலமான அந்த உரிமைக் கோரிக்கை நிந்தகமக் காணிகள் சபைக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

3. (1) எழுத்து மூலமான அந்த உரிமைக் கோரிக்கை பொருளளவில் இங்கு இணைக்கப்பட்டுள்ள முதலாவது அட்டவணை " அ " ஆகிய படிவத்தில் உள்ளவாறு அமைந்ததாய் அங்கு வேண்டப்பட்டுள்ள அலுவல்கள் பற்றிய விபரங்கள கொண்டதாய் இணைப்படிகளில் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

(2) சாதாரணமாகத் தமது சொந்தச் சார்பில், எழுத்து மூல உரிமைக் கோரிக்கையொவ்வொன்றும் உரிமைக் கோரிக்கையாளரினால் செய்யப்படல் வேண்டும்.

4. (1) பருவம் எய்தாதவர் அல்லது மூளைக்கோளாறு உடையவரொருவரின் சார்பிலான எழுத்து மூல உரிமைக் கோரிக்கையொன்று நீதிமன்றத்தால் முறையாக நியமிக்கப்பட்ட பாதுகாவலர் அல்லது முகாமையாளரொருவரால் செய்யப்படல் வேண்டும் ; அல்லது அத்தகைய நியமனமில்லாவிடத்து தகுதிவாய்ந்த அதிகாரி, அவர் தேவையெனக்கருதும் விசாரணை செய்தபின், அந்த நோக்கத்திற்கென முறைப்படி நியமித்த பாதுகாவலர் அல்லது முகாமையாளரொருவரால் செய்யப்படல் வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி அத்தகைய நியமனத்தைத் தாமே செய்யலாம் அல்லது அக்கறையுடைய ஒருவரால் அவருக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின் பேரில் செய்யலாம்.

(3) அத்தகைய நியமனத்தைச் செய்தபின் உடனடியாகத் தகுதிவாய்ந்த அதிகாரி எழுத்து மூல உரிமைக் கோரிக்கையில் தொடர்புபடுத்திக் கூறப்படும் நிந்தகமக் காணி எவரின் ஆதிக்கத்தினுள் அமைந்துள்ளதோ அந்த மாவட்ட நீதிபதிக்கு அறிக்கையொன்றை இணைப்படிகளில் கையொப்பமும் திகதியுமிட்டு அனுப்புதல் வேண்டும். அது பின்வரும் விவரங்களைக் குறிப்பிடவேண்டும் :

(அ) எழுத்து மூல உரிமைக் கோரிக்கையின் விவரங்கள் ;

(ஆ) உரிமைக் கோரிக்கை எவர் சார்பில் செய்யப்படுகின்றதோ அந்தப் பருவமெய்தாதோரின் அல்லது மூளைக்கோளாறு உடையவரின் முழுப் பெயரும் முகவரியும் ;

(இ) காப்பாளராக அல்லது முகவராக நியமிக்கப்பட்டவரின் முழுப் பெயரும் முகவரியும் ;

(ஈ) நியமனம் செய்யப்பட்ட திகதி ;

(உ) நியமனம் செய்யப்பட்டதற்கான காரணங்கள்.

(4) அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் மாவட்ட நீதிபதி அந்த நியமனத்தை அனுமதிக்கலாம், அல்லது அனுமதிக்காமல் விட்டுப் பிறரொருவரை நியமிக்கலாம்; மாவட்ட நீதிபதி நியமனத்தை அனுமதித்தால் அது தகுதி வாய்ந்த அதிகாரியினால் செய்யப்பட்ட நேரத்திலிருந்து செல்லுபடியாதல் வேண்டும்.

(5) தாம் நியமனத்திற்கு அனுமதி வழங்குமுன் அல்லது அனுமதி வழங்காமல் விடுமுன் தகுதிவாய்ந்த அதிகாரியையோ தகுதிவாய்ந்த அதிகாரியினால் நியமிக்கப்பட்ட காப்பாளரையோ, அல்லது முகாமையாளரையோ அல்லது பருவமெய்தாதவரையோ மூளைக்கோளாறுடையவரையோ, அல்லது பிறர் எவரையோ தமக்கு முன் தோன்றுமாறு கேட்க வேண்டியது அவசியமாதலாகாது.

(6) அறிக்கையின் இரு இணைப்படிகளில் தமது கட்டளையை மாவட்ட நீதிபதி குறித்தல் வேண்டும். அவர் ஒரு இணைப்படியைத் தமது நீதிமன்றத்தில் கோப்பில் இணைத்து மற்றதைத் தகுதி வாய்ந்த அதிகாரிக்குத் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வண்ணம் திருப்பியனுப்பப்பட்ட இணைப்படியைத் தகுதிவாய்ந்த அதிகாரி, ஏற்புடைய எழுத்து மூல உரிமைக் கோரிக்கையுடன் இணைக்கவேண்டும். இந்த நியமனம், சட்டத்தின் கீழ் எழுத்து மூல உரிமைக் கோரிக்கையினை முடிவு செய்தற்கும் நடுத்தீர்வைக்கும் சட்டமுறையில் செல்லுபடியாக வேண்டியதுடன் பயனுறுதியும் வாய்ந்ததாதல் வேண்டும்.

5. (1) விதித்த கால எல்லைக்குள் எழுத்துமூலமான உரிமைக் கோரிக்கையொன்று கிடைக்கப்பெறுமிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி, நிருணய உத்தியோகத்தரினால் அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில் அமைந்த அறிவிப்பு ஒன்றை, உரிமைக் கோரிக்கை சம்பந்தப்பட்ட காணிக்குள் ஒட்டுமாறு செய்தல் வேண்டும். அத்துடன் விபரங்களின் செம்மைபற்றிய அறிக்கையை, உரிமைக் கோரிக்கையில் குறிப்பிட்ட காணியமைந்துள்ள பகுதிக் கிராம சேவகரிடமிருந்து அவருக்குரிய பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரினூடாகப் பெறுதல் வேண்டும்.

(2) உரிமைக் கோரிக்கையொன்று அவருக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட கிராம சேவகர் எழுத்து மூல உரிமைக்கோரிக்கையிற் குறிப்பிடப்படும் காணியின் மாதிரிப் படம் அல்லது அல்லது வரைப்படப்படியை 16 சங்கிலித்தாள் நில அளவை வரிப்படத்திலிருந்து அல்லது வேறு அரசாங்க நில அளவைக் கிடைப்படத்திலிருந்து தயாரித்து, கிடைக்கக்கூடிய விபரங்களையும் சேர்த்து, அறிக்கையுடன் அத்தகைய மாதிரிப்படிவத்தையல்லது வரைப் படப்படியை அணைத்து அனுப்பல் வேண்டும்.

(3) கிராம சேவகரின் அறிக்கை இயன்றவரை ஆய்ந்தறியக் கூடியவாறு நிந்தகமக் காணியின் பிற உரிமை கோருபவர்களின் பெயர்களையும் முகவரிகளையும் கொண்டிருக்க வேண்டும்.

(4) கிராம சேவகரின் அறிக்கையைப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரிடமிருந்து பெற்றவுடன், தகுதிவாய்ந்த அதிகாரி சேவை ஆட்சிப் பதிவேட்டிற் காணப்படும் நிந்தகமக் காணி தொடர்பான பதிவுகளின் சாரத்தை தயாரிக்குமாறு செய்து அது அவரால் அல்லது அவரால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் அத்தாட்சிப்படுத்தப்பட ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(5) அதன் பின தகுதிவாய்ந்த அதிகாரி எழுத்து மூல உரிமைக் கோரிக்கையுடன் கிராம சேவகரின் அறிக்கையையும், அளவைத் திட்ட வரைப்படத்தையும் சேவை ஆட்சிப் பதிவேட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சாரத்தையுந் தொடர்புள்ள எல்லாச் சாதனங்களையும் பத்திரங்களையும் நிருணய உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

6. (1) நிர்ணய உத்தியோகத்தர் எழுத்து மூல உரிமைக்கோரிக்கையையும் அது தொடர்பான சாதனங்களையும் துருவிப்பார்த்து பொருத்தமான தகவல், விவரங்கள் முதலியன கொடுக்கப்பட்டுள்ளன என்று தம்மைத் திருத்திப்படுத்திக் கொண்ட பின்பு அதைச் சட்டத்தின் பிரிவு 21 இன் கீழ் உரிமை பற்றிய நடுத்தீர்ப்பு வழங்குவதன் பொருட்டு நிந்தகமக் காணிச்சபைக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) நிர்ணய உத்தியோகத்தர் காணியை அல்லது அதன் ஒரு பாகத்தை அளப்பது அவசியமெனக் கருதினால் அதை அனுப்புமுன் அளக்குமாறு அவர் ஆணையிடல் வேண்டும்.

(3) தொடக்கத்தில் அளவைச் செலவை அரசாங்கம் ஏற்கும். ஆனால் அச்செலவின் ஒருபகுதி, ஏக்கரொன்றுக்குப் பதினைந்து ரூபாவுக்கு மேற்படாது, உரிமைக் கோரிக்கையாளரிடமிருந்து அறவிடப்படும்.

7. (1) 6 ஆம் ஒழுங்குவிதியிற் குறிப்பிடப்பட்டுள்ள அளவை, அளவைத் திணைக்களத்தினால், அதன் அளவையாளர் அதிபதியின் அறிவுறுத்துரைகளின்படி செயயும் உத்தரவுப் பத்திரம் பெற்ற அளவையாளரினால், சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஆணைப்படி செய்யப்படல் வேண்டும்.

(2) அளவைக்கான ஆணை நிருணய உத்தியோகத்தரால் தீர்மானிக்கப்படக்கூடிய படிவத்தில் அமைதல் வேண்டும்.

(3) அளவைக்கான ஆணை விடுக்கப்படமுன் தகுதிவாய்ந்த அதிகாரி, உரிமை கோருபவரிடமிருந்து, அளவை செய்யப்படுவதற்கான காணியின் ஏக்கர் ஒவ்வொன்றிற்கும் அல்லது ஒரு ஏக்கரின் அதன் எஞ்சிய பாகத்திற்கு 2 ரூபா 50 சதத்திற்கு மேற்படாத தொகையைக் கட்டுப்பணமாக அறவிடல் வேண்டும். இக்கட்டுப்பணம் ஒழுங்குவிதி 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள செலவுக்கு எதிராக ஒதுக்கி வைக்கப்படல் வேண்டும்.

(4) அளவைக்கான ஆணையின் இரு பிரதிகள் ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டும். ஒரு பிரதி அளவை செய்யப்படவுள்ள காணியில் ஒட்டி விடப்பட வேண்டும். மற்றையது உரிமை கோருபவரின் தகவலுக்காக அனுப்பப்படவேண்டும்.

8. (1) எழுத்து மூல உரிமைக் கோரிக்கையொன்று அது சம்பந்தமாகச் செய்யப்பட்டுள்ள அல்லது அளவைக்கான ஆணை வழங்கப்பட்ட எந்தவொரு காணிக்குள்ளும் நிர்ணய உத்தியோகத்தர், சபையின் அங்கத்தவரொருவரும், தகுதி வாய்ந்த அதிகாரி, ஆணையாளர், கிராம சேவகர் அல்லது நிர்ணய உத்தியோகத்தரிடம் அல்லது தகுதி வாய்ந்த அதிகாரியிடம் எழுத்தில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவர் சூரிய உதயத்திற்கும் மறைவுக்கும் இடைப்பட்ட நேரத்தில் அக்கோரிக்கை சம்பந்தமான எந்நோக்கத்துக்குமாக உட்பிரவேசித்தல் சட்ட முறையானதாதல் வேண்டும்.

(2) அளவைக்கான ஆணைப் பிரதியொன்று காணியில் ஒட்டப்பட்டபின் ஆணையாளர் அல்லது அவருடைய அதிகாரத்தின் கீழ் கடமையாற்றும் யாரேனுமொருவர் தேவைப்படும் ஆட்கள், கருவிகள், பொருட்கள், வாகனங்கள், மிருகங்கள் ஆகியவற்றுடன் சென்று,

(அ) அந்தக் காணியை அளந்து அதன் மட்டங்களைக் குறிக்கலாம் ;

(ஆ) அக்காணியின் கீழ்ப்படை மண்ணைத் தோண்டலாம் அல்லது துளைக்கலாம் ;

(இ) அக்காணியின் எல்லைகளையும், அக்காணியில் செய்வதற்கு உத்தேசித்துள்ள வேலையின் உத்தேச நிரையையும் விதிக்கலாம் ;

(ஈ) அத்தகைய எல்லைகளையும், மட்டங்களையும் நிரைகளையும் அடையாளமிடுவதன் மூலமும் குழிகள் வெட்டுவதன் மூலமும் குறிக்கலாம் ;

(உ) பிறவிதத்தில் அக்காணியின் அளவைப் பூர்த்தி செய்யமுடியாதவிடத்தும் அத்தகைய மட்டங்கள் எடுக்கப்பட முடியாதவிடத்தும் அத்தகைய எல்லைகளும் நிரைகளும் குறிக்கப்பட முடியாதவிடத்தும் அக்காணியினுள்ள பயிரை, வேலியை அல்லது காட்டை வெட்டித் துப்புரவாக்கலாம், அத்துடன்

(ஊ) காணியை அளத்தற்கும் எல்லைகளைக் குறிப்பதற்கும் தேவையான பிற எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம்.

ஆயின் ஆணையாளரோ, அவருடைய அதிகாரத்தின் கீழ் கடமையாற்றும் ஒருவரோ, மேலே குறித்த அதிகாரங்களைக் கையாளுவதற்குரிய தன் நோக்கம் பற்றி அக்காணியில் வசிப்பவருக்குக் குறைந்த பட்சம் ஏழு நாள் முன் அறிவித்தல் கொடுக்காது அவ்வாறு செய்வதற்கு அக்காணிக்குள் நுழையக்கூடாது.

(3) நில அளவையாளர் அதிபதி அல்லது அவருடைய உத்தியோகத்தர் ஒருவர் ஆணையாளராகவிருக்கும் பட்சத்தில், அவர் அளவையைச் செய்வித்தல், எல்லைகளைக் குறிப்பித்தல், தேவைப்படும் அளவைப் படமாதிரிகளைத் தயாரித்தல் ஆகியவற்றைச் செய்விக்க வேண்டியதுடன் அளவை செய்யுமாறு ஆணையிட்ட உத்தியோகத்தருக்கு அளவைப்பட மாதிரிகளை அனுப்புவிக்கவும் வேண்டும்.

(4) ஆணையாளர் உத்தரவு பெற்ற நில அளவையாளராகவிருக்கும் பட்சத்தில், அத்தகைய ஆணையாளர், அளவை ஆணையின் இரு பிரதிகளைப் பெற்றவுடன் அவற்றை அளவை செய்யப்படவுள்ள அக்காணி அமைந்துள்ள பிரதேசத்தின் அளவைக் கண்காணிப்பாளரிடம் அனுப்பிவைத்து, தேவையான அறிவுறுத்துரைகளைப் பெறுதல் வேண்டும். அளவைக் கண்காணிப்பாளர் அறிவுறுத்துரைகளைத் தாமதமின்றி வழங்கவேண்டியதுடன், அளவை ஆணையின் பிரதியொன்றைச் சம்பந்தப்பட்ட ஆணையாளரிடம் திருப்பியனுப்ப வேண்டும்.

(5) ஆணையாளர் அதன் பின் அறிவுறுத்துரைகளின்படி அளவையைச் செய்யவேண்டியதுடன் தமது மூலப் படத்தையும் அளவை, எல்லை குறித்த செலவுப் பட்டியலையும், கள ஏட்டையும் அந்த அளவைக் கண்காணிப்பாளருக்குச் சோதனையின் பொருட்டு அனுப்புதலும் வேண்டும்.

9. (1) சட்டத்தின் 7 (1) ஆம் பிரிவின் கீழான ஆற்றுப்படுத்தலொவ்வொன்றும் பொருளளவில், இதற்குள்ள அட்டவணையின் “ ஆ ” ஆகிய படிவத்திலிருக்க வேண்டியதுடன் கையூமையாகவோ அல்லது பதிவு அஞ்சலின் மூலமாகவோ சபையின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்படலும் வேண்டும்.

(2) சபைச் செயலாளர் நிர்ணய உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கமைந்தும் இருத்தல் வேண்டும். சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட எழுத்து மூல உரிமைக் கோரிக்கையிலிருந்து எழும் விடயங்கள் பற்றி அவர் பணிப்புரைகளைச் சபைத் தலைவரிடமிருந்து பெறுதல் வேண்டும்.

(3) யாதாயினும் உரிமைக் கோரிக்கை பற்றிய ஆற்றுப்படுத்தலைப் பெற்றவுடன் செயலாளர் அவ்வாற்றுப்படுத்தலைப் பதிவு செய்து சபையின் தலைவர் முன்னிலையில் வைத்தல் வேண்டும்.

10. (1) சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட உரிமைக் கோரிக்கையை முடிவு செய்தற்குரிய திகதியையும் நேரத்தையும் பற்றிச் செயலாளர் சபையின் தலைவரிடம் உசாவ வேண்டும்.

(2) அதன்படி செயலாளர் சம்பந்தப்பட்ட கட்சியினரையும் சாட்சிகளையும் மற்றும் உரிமைக் கோரிக்கையினால் பாதிக்கப்படக் கூடியவர் எனக் கருதப்படும் எல்லோரையும் உரிமைக் கோரிக்கையை முடிவு கட்டுவதற்கெனக் குறிக்கப்பட்ட நாளில் சபையின் முன் தோன்றிச் சான்று கூறுதற்கு அல்லது குறிக்கப்பட்ட சாதனங்களில் ஏதாவதொன்றை வழங்குவதற்காக அழைப்பாணை விடுத்தல் வேண்டும்.

(3) ஒருவருக்கு அழைப்பாணை வழங்குவது கை மூலமாகவோ அல்லது (கடைசியாகத் தெரிந்த அவரின் முகவரியிட்ட) பதிவு அஞ்சல் மூல மாகவோ அல்லது அவர் வசிப்பதாகத் தெரிந்த கடைசி இடத்தின் நுழைவாயிலில் ஒட்டுவதன் மூலமாகவோ நிறைவேற்றப்படல வேண்டும். அழைப் பாணை சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய படிவத்தில் இருத்தல் வேண்டும்.

11. உரிமைக் கோரிக்கையெதாவது சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டிருக்குமிடத்து அத்தகைய உரிமைக் கோரிக்கையால் தமது நலன்கள் பாதிக்கப்படும் ஒருவர் தன்னை ஒரு கட்சியாகச் சேர்க்குமாறு சபைக்கு விண்ணப்பிக்கலாம். அத்தகைய விண்ணப்பம் ஏதேனும் செய்யப்பட்டிருந் தால், அத்தகையவரின் நலன்கள் அவரை ஒரு கட்சியாகச் சேர்க்காவிட்டால் பாதிக்கப்படலாம் எனச் சபை திருப்திப்படுமிடத்து அந்த விண்ணப்பத்தை அனுமதிக்கலாம்.

12. சபை மேற்கொள்ளும் விசாரணையில், எந்த நடவடிக்கைக்காயினுமான எக்கட்சியினரேனும் போதிய காரணம் காட்டாமல் சமூக மளிக்கத் தவறினால் சபை விசாரணையைப் பிறிதொரு திகதிக்குப் பின் தள்ளிப்போடலாம் அல்லது அத்தகைய கட்சியினரின் வராமையைப் பொருட் படுத்தாமல் தொடர்ந்து நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

13. சபையானது ஏதேனுமொரு உரிமைக் கோரிக்கை தொடர்பான ஏதேனுமொரு தீர்மானத்தில் அல்லது கட்டளையில் கவனக்குறைவு காரணமாக ஏற்பட்ட எழுத்து வழுவை அல்லது பிழையைத் திருத்தலாம். நடுத்தீர்ப்பு அல்லது முடிவு கசெற்றில் வெளியிடப்பட்ட பின் அத்தகைய திருத்தம் ஏதும் செய்யப்பட்டால் அத்தகைய திருத்தமும் கசெற்றில் வெளியிடப்பட வேணடும்.

14. சபையின் முன் ஏதேனுமொரு உரிமைக் கோரிக்கை பற்றிய விசாரணை நடக்கும்போது உரிமை கோருபவரை அல்லது அதில் அக்கறை உடையவராகித் தகுதியுடையவரெனச் சபை கருதுபவரை தம் வழக்கினை உரைக்குமாறு சபை வேண்டுதல் வேண்டும்.

15. (1) ஏதேனுமொரு உரிமைக் கோரிக்கை சம்பந்தமான சபையின் ஒவ்வொரு முடிவும் எழுத்தில் அமைதல் வேண்டும், அத்துடன் அது பகிரங்கமாகத் தலைவரினால் வாசிக்கப்படல் வேண்டும்.

(2) சபையின் ஒவ்வொரு முடிவும் அதற்கான காரணங்களைக் கொண்டிருக்க வேண்டும் ; அத்துடன் அத்தகைய ஒவ்வொரு முடிவும் தலைவரி னால் கையொப்பமிடப்பட்டுமிருத்தல் வேண்டும்.

16. சபைச் செயலாளர் தலைவரின் பணிப்பின் வண்ணம், சபைக்குச் செயயப்படும் ஆற்றுப்படுத்தல்களை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கு வதற்கான சபையின் கூட்டங்களைக் கூட்டுதல் வேண்டும்.

17. (1) ஆற்றுப்படுத்தலொன்றின் கட்சியினரொருவர் எழுத்து மூல உரிமைக் கோரிக்கை செய்தபின் ஆனால், உரிமைக் கோரிக்கையினைத் தீர்மானிப்பதற்கு முன் இறந்தால் இறந்தவரின் சட்டமுறை உரித்தாளர்கள், அவர்கள் இயன்ற வரையில் நிச்சயிக்கக்கூடிய அளவுக்கு இறந்தவருக் காகப் பதிலீடு செய்ய**வே**ண்டும்.

(2) அத்தகைய பதிலீடு செய்யும் நோக்கத்திற்காக சபையானது, இறந்தவரின் உரித்தாளர்களையும் எழுத்து மூல உரிமைக்கோரிக்கையிற் தொடர்புபட்ட காணியில் வசிப்பவரையும் அல்லது வசிப்பவர்களையும் அல்லது அக்காணியில் அக்கறை யுடையவரையும் அல்லது உடையவர்களையும் உரிய அறிவித்தல் கொடுத்தபின் சபை முன் தோன்றுமாறு வேண்டலாம்.

18. (1) உரிமைக் கோரிக்கையொன்று சம்பந்தமான ஆற்றுப்படுத்தலொன்று சபையால் விசாரிக்கப்பட்டு தீர்மானிக்கப்பட்டவுடன், செய லாளர் அத்தகைய தீர்மானத்தை உரிமை கோருபவருக்குக் காலந் தாழ்த்தாமல் பதிவு அஞ்சல் மூலம் அறிவித்தல் வேண்டும்.

19. (1) சபையின் முடிவு உரிமைக் கோரிக்கையாளர்க்குத் திருத்தியளிக்கவில்லையாயின், தமது உரிமைக்கோரிக்கை சம்பந்தமாகச் சபை அதன் தீர்மானத்தை அவர்க்கு அறிவித்த நாளிலிருந்து 30 நாட்களுள், சட்டத்தின் 20 ஆம் பிரிவினது ஏற்பாடுகளுக்கமைய, அத்தீர்மானத்துக் கெதிராக அவர் மேன்முறையீடு செய்யலாம்.

(2) அத்தகைய மேன்முறையீடு ஒவ்வொன்றும் மேன்முறையீடு செய்வதற்கான காரணங்களைக் காட்டி எழுத்துமூலமான கூற்றுவடிவில் அமைந்ததாகி மேன்முறையீடு செய்பவரால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) ஒவ்வொரு மேன்முறையீட்டுக் கூற்றும் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் முதலாம் அட்டவணையின் " இ " ஆகிய படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு மேன்முறையீட்டுக் கூற்றும், மேன்முறையீட்டுக்குரிய காலத்துள் சம்பந்தப்பட்ட காணி இருக்கும் இடத்தில் நியாயாதிக்க முடைய மாவட்ட நீதிமன்றச் செயலாளருக்கு ஒப்படைக்கப்பட வேண்டும் அல்லது பதிவு செய்யப்பட்ட அஞ்சலில் அனுப்பப்பட வேண்டும்.

(5) மாவட்ட நீதிமன்றத்தினால் மேன்முறையீட்டு மனு கிடைக்கப்பெற்றவுடன் அத்தகைய நீதிமன்றத்தின் செயலாளர், சபையின் செய லாளரிடமிருந்து அத்தகைய உரிமைக் கோரிக்கை சம்பந்தமான விசாரணைத் தாள்களை அல்லது வழங்குப் பதிவேட்டினைத் தாமதமின்றி எழுத்து மூலங் கோருதல் வேண்டும். சபையின் செயலாளர் தாமதமின்றி அவற்றை அனுப்புதல் வேண்டும்.

20. (1) ஏதேனுமொரு ஆற்றுப்படுத்தல் சம்பந்தமாகச் சபையின் தீர்ப்புக்கு எதிராக சட்டத்தின் 20 (1) ஆம் பிரிவின்படி மேன்முறையீடு ஒன்று அதற்குச் செய்யப்பட்டிருக்கும் மாவட்ட நீதிமன்றம் அதன் தற்றுணிபின்படி—

(அ) அத்தகைய முடிவினை உறுதிப்படுத்தலாம் ;

(ஆ) அத்தகைய முடிவினைத் தள்ளுபடி செய்யலாம் ;

(இ) அத்தகைய முடிவினைத் தள்ளுபடி செய்து அதன் இடத்தில் ஒரு புதுத்தீர்மானத்தைச் செய்யலாம் ;

(ஈ) தேவையெனக் காணப்படக்கூடிய முறையில் முடிவை வேறுபடுத்தலாம் அல்லது திருத்தம் செய்யலாம் ;

(உ) செலவுகள் வழங்கலாம்.

21. அத்தகைய ஒவ்வொரு மேன்முறையீடும் சம்பந்தமான நடவடிக்கைகள், மனு மூலமான உடனடி நடைமுறை சம்பந்தமாகவுள்ள குடியியல் வழக்கு நடைமுறைச் சட்டக் கோவையின் 24 ஆம் அதிகாரத்தின் ஏற்பாடுகளுக்கு அமைதல் வேண்டும்.

22. உரிமைக் கோரிக்கையொன்றில் ஆற்றுப்படுத்தலொன்றில் மாவட்ட நீதிமன்றத்தினாற் செய்யப்படுந் தீர்மானம் சபையின் செய லாளருக்கு மாவட்ட நீதிமன்றத்தின் செயலாளரினால் எழுத்தில் அறிவிக்கப்படல் வேண்டும். மேன்முறையீட்டு நோக்கத்திற்காக மாவட்ட மன்றத்தினால் சபையிடமிருந்து பெறப்பட்ட சாதனங்களும் திருப்பியனுப்பப்படல் வேண்டும்.

23. (1) ஏதேனுமொரு உரிமைக் கோரிக்கை சம்பந்தமாகச் சபையினால் ஒரு முடிவு செய்யப்பட்டதன் பின் மேன்முறையீட்டுக் காலம் முடிவடைந்ததன் மேல் அல்லது மாவட்ட மன்றத்தினால் மேன்முறையீடு தீர்மானிக்கப்பட்டமை சபைக்கு அறிவிக்கப்பட்டதன் மேல் சபையின் செயலாளர், அத்தகைய முடிவிற்கு அல்லது தீர்மானத்திற்கிணங்கச் சட்டத்தின் 21 (1) ஆம் பிரிவின் பிரகாரம் உரித்து சம்பந்தமான நடுத்தீர்ப் பொன்றை வழங்கும் நோக்கத்திற்காக, சபையின் தலைவரால் நியமிக்கப்பட்ட தேதியிலும் நேரத்திலும் சபையின் கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

(2) சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழான நடுத்தீர்ப்பொவ்வொன்றும் இதனோடிணைந்துள்ள முதலாம் அட்டவணையின் " ஈ " ஆகிய படிவத்தில் அமைந்ததாகி, ஆண்டுச் சுட்டப்பட்டுள்ள விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) சபையின் செயலாளர் சபைக் கூட்டமொவ்வொன்றினதும் நிகழ்ச்சிக் குறிப்பினை ஒரு பதிவேட்டில் எழுதிவைத்திருக்க வேண்டும். அத்தகைய ஒவ்வொரு கூட்டத்திலும் பிரசன்னமாயிருந்த தலைவராலும் உறுப்பினர்களாலும் அத்தகைய நிகழ்ச்சிக் குறிப்புக்கள் கையொப்பமும் தேதியுமிடப்படல் வேண்டும்.

(4) உரிமைக் கோரிக்கைகள் சம்பந்தமான விசாரணைகள் தொடர்பில் சபை மேற்கொள்ளும் நடைமுறை விதிகளைச் சபையே வகுத்துக் கொள்ளலாம்.

24. (1) (117 ஆம் அத்தியாயமான) சாதனப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பெற்ற காணிப்பதிவு அலுவலகம் ஒவ்வொன்றிலும், நிந்தகமக் காணி முழு உரிமைக்காரர்க்கென்றேயமைந்த இடாப்பொன்று சட்டத்தினது 21 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் நடுத்தீர்ப்புக்கள் பதிவு செய்யப்படுவதற்காகப் பேணப்படல் வேண்டும். (இவ்விடாப்பு ஈண்டு இனிமேல் மாவட்ட இடாப்பு என குறிப்பிடப்படும்).

(2) மாவட்ட இடாப்பு, பதிவாளர் அதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடிய படிவத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

(3) சட்டத்தினது 21 ஆம் பிரிவின் கீழ் சபையினால் செய்யப்படும் ஒவ்வொரு நடுத்தீர்ப்பும் நிந்தகமக்காணி முழுமையாக அல்லது பிரதானமாக இடம் பெற்றிருக்கும் பதிவு மாவட்டத்தின் காணிப் பதிவாளருக்குப் பதிவின் பொருட்டு மூன்று படிகளில் அனுப்பப்பெறல் வேண்டும்.

(4) மாவட்ட இடாப்பில் நடுத்தீர்ப்புப் பதிவானதும், பதிவாளர் தீர்ப்பின் இருபடிகளைச் சபைக்குச் சேருமாறு செய்தல் வேண்டும். மூன்றாவது படியினை தமது அலுவலகப் பதிவேட்டில் கோவைப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

25. (1) அத்தகைய பதிவு பதிவேட்டில் செய்யப்படுமுன், நிர்ணய உத்தியோகத்தர் வேறுமொரு அளவை அவசியமெனக் கருதினால் அவர் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரி, நடுத்தீர்ப்பு வழங்கப்பட்ட நிந்தகமக் காணி சம்பந்தமாக அத்தகையவொரு அளவையை நடாத்தும்படி செய்யலாம்.

(2) அத்தகைய அளவையின் முழுச் செலவும் அரசாங்கத்தினால் ஏற்கப்படுதல் வேண்டும்.

26. எவராவது இச்சட்டத்தினால் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட அதிகாரம் கடமை அல்லது பணியைக் கையாளுவதில் எவராயினும் உத்தியோகத்தரையோ ஆளையோ தடுக்கும் அல்லது எதிர்க்கும் எவரும் சட்டத்தின் கீழ் குற்றம் புரிந்தவராகக் கருதப்பட்டு, நீதவான் நீதிமன்றத்தினால் உடனடி விளக்கத்தின் பின் குற்றவாளியாகக் காணப்பட்டு, ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்தைச் செலுத்துவதற்கோ மூன்று மாதங்களுக்கு மேற்படாச் சிறைத் தண்டனைக்கோ அல்லது அத்தகைய குற்றப்பணத்தைச் செலுத்துவதற்கும் சிறைத்தண்டனைக்கும் ஆளாதல் வேண்டும்.

27. சபையின் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் இத்துடன் இணைக்கப்பட்ட இரண்டாவது அட்டவணையில் குறிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் அந்த அட்டவணையில் பொருத்தமான ஏற்பாடுகளுக்கிணங்கக் கணிக்கப்பட்ட ஊதியம், பிரயாணப்படி, வாழ்க்கைப்படி ஆதியன கொடுபடலாம்.

28. சபையின் முன் அழைக்கப்பட்ட சாட்சிகளுக்கு இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மூன்றாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வீதங்களில் கணக்கிடப்பட்ட வத்தாவும் பிரயாணப்படியும கொடுபடலாம்.

29. மாவட்ட மன்றினால் கட்டளையிடப்பட்ட செலவுகள் எவையும் குடியியல் வழக்கொன்றில ஏற்பட்ட செலவுகளாக அவை இருந்தாற் போல அறவிடப்படுதல் வேண்டும்.

30. இவ்வொழுங்கு விதிகளில் சந்தர்ப்பம் வேறு வகையில் வேண்டினாலன்றி, " சட்டம் " என்பது 1968 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, நிந்தகமக் காணிச் சட்டம் என்று பொருள்படும் ; சபை என்பது சட்டத்தின் 8 (1) ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பெற்ற நிந்தகமக் காணிச் சபை எனப் பொருள்படும். " தலைவர் " என்பது சபைத் தலைவர் எனவும், எழுத்து மூலமான உரிமைக் கோரிக்கை பற்றிய விசாரணைத் தொடர்பில், சபைத் தலைவர் சமூகமளிக்காவிடத்து கூட்டத் தலைவர் எனவும் பொருள்படும்.

" அக்கறையுடையோர் " எனபது இணைவுடையதாகவோ இணைவற்றோ பொருந்திய ஆட்கூட்டம் எனப் பொருள்படும்.

" சேவை ஆட்சிப் பதிவேடு " என்பது (467 ஆம் அத்தியாயமான) சேவை ஆட்சிக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தயாரிக்கப்பட்ட சேவை ஆட்சிப் பதிவேடு எனப் பொருள்படும் ;

" நிருணய உத்தியோகத்தர் " என்பது இணை நிருணய உத்தியோகத்தரொருவரையும் அடக்கும்.

முதலாவது அட்டவணை

படிவம் " அ "

**1968 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க நிந்தகமக் காணிச்சட்டம்**

## உரிமைக் கையளிப்புக்காக சட்டத்தின் பிரிவு 6 (1) இன் கீழ் எழுத்து மூலக் கோரிக்கை

நிந்தகமக் காணிச் சபை, கொழும்பு.

தகுதிவாய்ந்த அதிகாரி, அதாவது ........................................................................................அரசாங்க அதிபர், ஊடாக.

.......... சேர்ந்த .................... நான், என் சார்பாக , ............ சேர்ந்த .................. பாதுகாவலர்/முகாமையாளர் சார்பாக இத்தால் கோருவது என்னவென்றால், 1968 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க நிந்தகமக் காணிச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் என்சார்பில் ............ சேர்ந்த .................. எழுத்து மூலக் கோரிக்கையில் சொல்லப்பட்ட நிந்தகமக் காணி சம்பந்தமான நடுத்தீர்ப்பையும் நிந்தகமக் காணியின் முழு உரிமையாளராக ஒரு பதிவுச் சான்றிதழையும் எனது சார்பில் வழங்குமாறு வேண்டுகின்றேன்.

2. அத்தகைய சான்றிதழ் வழங்கப்படுமுன் ஒரு நில அளவை நடைபெறுமாயின், அந்நில அளவைக்கான செலவு ஏக்கருக்குப் 15 ரூபாவுக்கு அதிகமாக இராதிருப்பின், நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கின்றேன்.

3. .................. இன் பாதுகாவலராக/முகாமையாளராக நியமிப்பு அளிக்கப்பெற்ற சான்றிதழ் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

4. இவ்வித எழுத்துமூலக் கோரிக்கையை ஆராயவும் தீர்மானிக்கவும் தேவையான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. என் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில இவை உண்மையானவையும் சரியானவையுமாகும்.

_____________,
கோருபவர் / பாதுகாவலர் / முகாமையாளர்.

தேதி :— ............................

| | |
|---|---|
| 1. உரிமை கோருபவர்/ பாதுகாவலர்/ முகாமையாளருடைய பெயரும் விலாசமும். | |
| 2. எழுத்து மூலக் கோரிக்கை யாருக்காகச் செய்யப்படுகிறதோ அவருடைய முழுப் பெயரும் விலாசமும். | |
| 3. நிந்தகமக் காணியின் பெயரும் பரப்பும். அத்துடன் 1968 யூன் மாதம் 22 இல் யாருடைய உடைமையாக இருந்ததென்பதும். | |
| 4. நிந்தகமக் காணியின் எல்லைகளின் விபரம்.<br>வடக்கு.<br>கிழக்கு.<br>தெற்கு.<br>மேற்கு. | |
| 5. பயிரின் தன்மையும் காலமும்/அல்லது கட்டிடங்கள் ஆதியன. | |
| 6. நிந்தகமக் காணியிருக்கும் இடம் (மாவட்டமும்) பெ. இ. உ. இன் பிரிவும் கிராம சேவகரின் பிரிவும் கிராமமும். | |
| 7. நில அளவைப் படம் ஏதேனும் இருந்தால் அதன் விபரம் (அப்படியாயின் வரைபடியை அல்லது மாதிரிப் படத்தை இணைக்கவும்). | |
| 8. உறுதிகள் ஏதாவது இருந்தால் அதன் விபரம். | |
| 9. பங்கின் இலக்கம் தெரிந்தால் அவ்விலக்கம். | |
| 10. பங்கின் பெயர் தெரிந்தால் அப்பெயர். | |
| 11. மாறுவேறு அல்லது பரவணிப் பங்கா என்பது. | |

| | |
|---|---|
| 12. சொந்தக்காரரின் முழுப் பெயரும் முகவரியும் தெரிந்தால் எழுதுக. | |
| 13. குடியிருப்பவரின் அல்லது வைத்திருப்பவரின் முழுப் பெயர். | |
| 14. கொடுக்க வேண்டிய சேவையின் தன்மை அல்லது சேவைக்காகக் கொடுக்கப்பட்ட தொகை. | |
| 15. தற்போதைய கோரிக்கையின் அடிப்படையும் தன்மையும். | |
| 16. விசாரணையின் போது அவசியமாயின் உரிமை கோருபவர் கூப்பிட விருக்கும் சாட்சிகளின் முழுப் பெயரும் முகவரியும். | |
| 17. உரிமை கோருபவர் தன் உரிமையைத் தாபிப்பதற்கு நம்பியுள்ள சாதனங்களின் விபரம். | |
| 18. வமிச அட்டவணை (இது இணைக்கப்பட வேண்டியது) மாவட்ட சேவை ஆட்சிப் பதிவேட்டில் இருப்பதுபோல. | |

**முதலாவது அட்டவணை** **படிவம் “ ஆ ”**

ஒழுங்குவிதி 2 (1)

**1968 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க நிந்தகமக் காணிச் சட்டம்.**

கொழும்பிலுள்ள நிந்தகமக் காணிச் சபைக்கு,

## எழுத்து மூலக் கோரிக்கையை முடிவுக்காக அனுப்புதல்

1968 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, நிந்தகமக் காணிச் சட்டத்தின் பிரிவு 21 இன் கீழுள்ள பிரிவு 6 (1) இன் கீழ் உரிமை கோரும் நடுத்தீர்ப்புக்கான எழுத்துமூலக் கோரிக்கையை ..................... சேர்ந்த ............................ திரு./திருவாட்டி ............................ சமர்ப்பித்துள்ளார். சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக செய்யப்பட்ட ஒழுங்கு விதிகளின் நிபந்தனைகளுக்கமைந்து இவ்வித எழுத்து மூலக் கோரிக்கையை விசாரணை செய்து தீர்ப்பளிக்குமாறு நிந்தகமக் காணிச்சபைக்கு இதை விட்டுவிடுகிறேன்.

2. ................................ நிருவாக மாவட்டத்தில் இதைப்பற்றிய விசாரணை நடைபெறும்.

3. பின்னால் காணும் சாதனங்கள் இணைக்கப்பட்டுள்ளன :

(1) விரும்பிய எழுத்துமூலக் கோரிக்கை ;

(2) சொல்லப்பட்ட காணியின் மாதிரிப்படம் அல்லது திட்டப்படத்தின் சுவடு ;

(3) வம்சாவழி அட்டவணை ;

(4) கிராம சேவகரின் அறிக்கை ;

(5) காணி சம்பந்தமான சேவை ஆட்சிப் பதிவேட்டுப் பதிவின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.

4. *சாதாரணமாகச் சொல்லப்பட்ட கால எல்லைக்குள் எழுத்துமூலக் கோரிக்கை செய்யப்பட்டது.

நிர்ணய உத்தியோகத்தர்/மேலதிக நிர்ணய உத்தியோகத்தர்.

*பொருத்தமற்றவற்றை வெட்டி விடுக.

முதலாம் அட்டவணை படிவம் " இ ".

ஒழுங்கு விதி 25 (ii)

**1968 ஆம் ஆண்டின் நிந்தகமக் காணிச் சட்டம்.**

(சட்டத்தின் 20(1) பிரிவின் கீழ் மாவட்ட நீதி மன்றத்திற்கான மேன்முறையீடு)

## மேன்முறையீட்டு மனு

............................ மாவட்ட நீதிமன்றத்தில் ............................ என்னும் மேன் முறையீட்டாளரின் மேன் முறையீட்டு மனு.

முகவரி :

எதிராக

கொழும்பு நிந்தகமக் காணிச் சபை, எதிர்வாதி.

...................................... ...............................நிருவாக மாவட்டத்துத் தகுதிவாய்ந்த அதிகாரி, எதிர்வாதி.

............................ என்னும் விடயம் சார்பாய் கௌரவ நீதி மன்றத்தாரை திருப்திசெய்வதாக மேலே பெயர் சொல்லப்பட்ட மேன்முறையீட்டாளராகிய நான் பின்வருவனவற்றைத் தங்கள் சமூகத்திற்குக் கொணர விழைகின்றேன்.

தீர்ப்புக்கெதிரான மேன்முறையீட்டின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஆகவே மேன்முறையீட்டாளராகிய நான் நீதி மன்றம் மனமுவந்து பின்வரும் விடயத்தில் தீர்ப்பளிக்க வேண்டுகின்றேன்.

1.

2.

3.

4.

முகவரி, கையொப்பம்.

திகதி :

............................ வசிக்கும் சமாதான நீதவான் ............................ ஆகிய நான் மேலுள்ளது மேன்முறையீட்டாளரால் எனது சமுகத்தில் 19 ...... ம் ஆண்டு .......... மாதம் ...... ஆந் நாளன்று கையெழுத்திடப்பட்டதென இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

கையொப்பம்.
சமாதான நீதவான்.

முகவரி :

மேன்முறையீட்டாளர் இம் மேன்முறையீட்டில் காப்பாளர் அல்லது முகாமையாளர் என்னும் வகையில் கையொப்பமிடுவாராயின் அவர் அவ் உண்மையைக் கூறி யார் பெயரில் உரிமை கோருகின்றாரோ அவர் பெயரையும் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

படிவம் "ஈ"

1968 இன் 30 ஆம் இல. நிந்தகமக் காணிச் சட்டம்

## உரிமைத் தீர்ப்பு

........................என்பவரால்/காவலாளர்/முகாமையாளர் என்ற முறையில் ........................இன் பொருட்டு மேற்குறித்த சட்டத்தின் 6 (1) ஆம் பிரிவின்படி அட்டவணையின் 1 ஆம் பந்தியில் விபரித்தவாறுள்ள நிந்தகமக் காணித் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எழுத்து மூலக் கோரிக்கை தகுதிவாய்ந்த உத்தியோகத்தரால் மேற்குறித்த சட்டத்தின் 21 (1) ஆம் பிரிவின்படி நிந்தகமக் காணிச் சபையின் விசாரணை கோரி அனுப்பப்பட்டதாதலினாலும், அத்தகைய விசாரணைக் கோரிக்கையினை முறையாக ஆராய்ந்த பின் மேற்கொண்ட தீர்மானம், மேற்குறித்த சட்டத்தின் 19 (2) ஆம் பிரிவின்படி இறுதி முடிவானதாதலினாலும் அவ்விசாரணைக் கோரிக்கையினை மனுவின்பேரில் மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ........................மாவட்ட நீதி மன்றத்தினால் அது பற்றிய இறுதித் தீர்ப்புச் செய்யப்பட்டுள்ளதாதலினாலும் நிந்தகமக் காணிச் சபையானது 1968 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க நிந்தகமக் காணிச் சட்டத்தின் 21 (1) ஆம் பிரிவின் வண்ணம் அளிக்கப்பட்ட அதிகாரத்தைப் பிரயோகித்து, இறுதி முடிவான தீர்மானத்துக்கு ........................மாவட்டத்தின் முடிவான தீர்ப்புக்கு அமைந்து உரிமைத் தீர்ப்பை இத்தால் வழங்குகிறது. அதாவது ;

இதனோடு இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் 11 ஆம் பந்தியில் இடம் பெறும் பெயர்களையுடையோர் அப்பெயர்களுக் கெதிரே குறிக்கப்பட்டுள்ள பங்குகளின் முழு உடைமைக்காரர் ஆவர்.

குறித்த அட்டவணையின் 1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள காணித் தொடர்பில் III ஆம் பந்தியில் சுட்டிய தடைகளேயன்றி வேறு எவ்வித தடையும் அவர்கள் உரிமைக்குப் பங்கம் விளைக்காது. அக்காணி அல்லது அக்காணிப் பங்குகள் பிறர் எவரையுஞ் சாராது அவர்க்கே உரிமையுடையதாகும்.

### அட்டவணை

| பத்தி 1 | பத்தி 11 | பத்தி III |
|---|---|---|
| காணிகளின் விபரம் | தனிச் சொந்தக்காரரின் பெயரும் விலாசமும் | உரிமையுள்ள பிரிக்கப்பட்ட அல்லது பிரிக்கப்படின் பங்கும் பாரபந்தங்களும் |

........................ இன் நிருவாக வட்டாரத்தில் பெ. இ. வ. உ. இன் பிரிவின் கிராம சேவகரின் பிரிவின் ........................கிராமத்தில் அமைந்துள்ளதும் ........................என்று அழைக்கப்படுவதும் அறியப்படுவதும்........................ பரப்புக் கொண்டதும் ........................ஏ. ரூ. பே.

வடக்கில்........................ஐயும்

கிழக்கில் ........................ ஐயும்

தெற்கில் .... ........................ ஐயும்

மேற்கில் ........................ ஐயும்

எல்லைகளாகக் கொண்டதும் முக்கியமாக ........................ஆல் தயாரிக்கப்பட்டதும்........................ திகதியைக் கொண்ட ........................இலக்கத் திட்டத்தில் ........................இலக்கத் துண்டு என விபரிக்கப்படுவதுமான நிந்தகமக் காணி எனது அனுமதியுடன்........................ திகதி வழங்கப்பட்டது.

நிந்தகமக் காணி அலுவலகம்,
கொழும்பு.

தலைவர்,
நிந்தகமக் காணிகள் சபை.

தேவையற்றவற்றை நீக்கி விடுக.

### இரண்டாம் அட்டவணை

1. பின்னால் ஏற்படுத்தப்பட்டதற்கிணங்க நிந்தகமக் காணிச் சபையின் உறுப்பினர் யாவரும் இலங்கை அரசாங்கத்தில் உத்தியோகம் வகிக்காதவர்களாயிருந்தால், கூட்டங்களிற் சமூகமளிப்பதற்குப் பின்வரும் வீதத்தில் கணிக்கப்பட்ட கட்டணத்தைப் பெறும் உரித்துடையவராவர்.

(i) கூட்டத்தின் நிகழ்ச்சிக் காலம் இரண்டு மணித்தியாலங்களுக்கு அதிகப்படாத பட்சத்தில் ஒவ்வொரு கூட்டத்துக்கும் ரூபா 50.00.

(ii) கூட்டத்தின் நிகழ்ச்சிக் காலம் இரண்டு மணித்தியாலங்களுக்கு அதிகப்படும் பட்சத்தில் ஒவ்வொரு கூட்டத்துக்கும் ரூபா 75.00.

ஆயின், ஒருவரின் எழுத்துமூலக் கோரிக்கையைக் கேட்பது சம்பந்தமான கூட்டங்களுக்கு வருகை தருவதற்காகச் சபை உறுப்பினர் ஒருவர் கட்டணமாகப் பெறக்கூடிய தொகை ரூபா 100/– க்கு மேற்படக்கூடாது.

2. சபை உறுப்பினர்கள் தமது கடமை தொடர்பில் மேற் கொள்ளும் பிரயாணங்களின் பொருட்டுப் பின்வரும் ஏற்பாடுகளின்படி அவர் களுக்குப் பயணப்படி வழங்கப்படும் :

(அ) புகையிரதத்தின் மூலம் ஒரு உறுப்பினரால் மேற்கொள்ளக்ப்படும் நியாயமாகச் செய்யப்படும் எந்தப் பிரயாணத்திற்கும் அல்லது பிரயாணத்தின் ஒரு பகுதிக்கும் புகையிரத முதல் வகுப்புக் கட்டணத்துக்குச் சமமான பயணப் படிக்கு அவர் உரித்துடையவராவர்.

(ஆ) புகையிரத மூலம் நியாயமாகச் செய்ய முடியாது சொந்த வண்டி அல்லது வாடகை வண்டியில் மேற் கொள்ளப்படும் பிரயாணம் சம்பந்தமாக மைலொன்றுக்கு அல்லது ஒரு மைலில் மீதமாகவுள்ள தூரத்துக்கு 50 சத வீதம் பயணப்படி பெறுவதற்கு உறுப்பினர் உரித்துடையவராவர்.

(இ) பொது வசுவில் அல்லது அது போன்ற பொது ஊர்திகளில் மேற்கொள்ளப்படும் பிரயாணங்களுக்கு அவற்றுக்கான உண்மைக் கட்டணத் தொகையை உறுப்பினர் பயணப் படியாகப் பெறும் உரித்துடையவராவர்.

3. சட்டத்தை நிறைவேற்றும் பணியுடன் தொடர்புடைய வேலைகளில் ஈடுபட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் அப்பணி சம்பந்தமாகப் பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டியேற்படும் பொழுது இவர்களுக்குப் பொருத்தமான அரசாங்க நிதிப்பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கணிக்கப்படும் பிரயாணப் படிக்கும் உணவுப் படிக்கும் உரித்துடையவராவர்.

## மூன்றும் அட்டவணை

1. நிர்ணய உத்தியோகத்தரின் அல்லது நிந்தகமக் காணிச் சபையின் ஆலோசனைப்படி சாட்சியாளராக அழைக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தருக்கு நிதிப் பிரமாணங்களுக்கிணங்க உணவுப் படியும் பிரயாணப்படியும் வழங்கப்படும்.

2. (i) அரசாங்க உத்தியோகத்தர்களல்லாத சாட்சியாளருக்கு பின்வரும் வீதங்களில் படிகள் வழங்கப்படும்.

| (1) வகுப்பு | (2) நாளொன்றுக்கு வத்தா ரூ. ச. | மைல் ஒன்றுக்கு சதம் | (3) பிரயாணப்படி (அ) புகைவண்டி அல்லது வசு வண்டி அல்லாத பிற வண்டிகள் (ஆ) புகைவண்டி (இ) வசு வண்டி — புகை வண்டி | வசு வண்டி | (4) அட்டவணை வரும்படி உள்ளவர்கள் |
|---|---|---|---|---|---|
| I | 10 0 | 45 | முதல் வகுப்புக் கட்டணம் | உண்மையான வசு வண்டிக் கட்டணம் | வகுப்பு 1—வருடமொன்றுக்கு 6,000 ரூபாவுக்கு மேல் |
| II | 7 50 | 35 | ஷை | ஷை | வகுப்பு 11—வருடமொன்றுக்கு 3,600 ரூபாவுக்கு மேலும் 6,000 ரூபாவுக்குள்ளும் |
| III | 3 50 | 25 | இரண்டாம் வகுப்புக் கட்டணம் | ஷை | வகுப்பு 111—வருடமொன்றுக்கு 1,500 ரூபாவுக்கு மேலும் 3,600 ரூபாவுக்குள்ளும் |
| IV | 2 50 | 20 | ஷை | ஷை | வகுப்பு IV—வருடமொன்றுக்கு 1,500 ரூபாவுக்குள் |

(11) மைல் கணக்குக் கொடுப்பனவுகள் உட்பட உணவுப்படியையும் பிரயாணப் படியையும் கணிப்பதற்கு அரசாங்க நிதிப்பிரமாணங்களில் விதிக்கப்பட்டுள்ள விதிகளின் அடிப்படையில் மேலே கூறப்பட்ட வீதங்களில் வத்தாவும் பிரயாணப்படியும் கணிக்கப்படும்.

3. உரிமை கோருபவரால் காட்டப்படும் சாட்சிகளுக்கு மேலே உள்ள 2(i), 2(ii) ஒழுங்குவிதிகளின்படி பணம் கொடுப்பதன் பொருட்டு அழைப்பாணை வெளியிடப்படுவதற்கு முன் நிந்தகமக் காணிச் சபைச் செயலாளரிடம் அத்தகைய கொடுப்பனவுகளுக்கான தொகையை உரிமை கோருபவர் கட்டுவராயின் அச்சாட்சிகளுக்கு அப்பணம் கொடுக்கப்படும்.

4. நிந்தகமக் காணிச் சபையின் நிர்ணய உத்தியோகத்தர் அல்லது செயலாளர், எவராயினும் ஒருவர், இத்தகைய கொடுப்பனவுகளை செய்யும் அதிகாரம் பெற்றவர்களாவர்.

5. நிந்தகமக் காணிச் சபையினால் அல்லது குழுவினால் வழங்கப்பட்ட வரவுச் சான்றிதழின் பேரில் அல்லது நிர்ணய உத்தியோகத்தர்/மேலதிக நிர்ணய உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட விசேட சான்றிதழின் பேரில் மட்டுமே இது போன்ற கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.